மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை.
முன்னிலை: திரு.நா. சிவபழனி, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வக்கோட்டை.
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் நாள் சனிக்கிழமை
2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 23 ஆம் நாள்

**Cr.M.P.No.138/2026**

**Cr.No.312/2025 – Gandarvakkottai P.S.**

**மணிகண்டன், வயது 50,**
த/பெ.சூரியமூர்த்தி,
2-227 கள்ளர் தெரு,
கறம்பவிடுதி,
கறம்பக்குடி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம். ...மனுதாரர்

/எதிராக/

**காவல் ஆய்வாளர்,**
கந்தர்வக்கோட்டை காவல் நிலையம்.
குற்ற எண்.122/2025
U/s. 303(2) BNS r/w 21(1), 21(2) MMDR Act. ... எதிர்மனுதாரர்
**RP No.15/2025**

இம்மனு 20.02.2026-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. R. தீபா, M.A., L.L.M., அவர்கள் ஆஜராகியும், அரசுத் தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பின் பதிலை பெற்றும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனுவை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**மனுச்சுருக்கம் :**

இம்மனுவின் மனுதாரர்/ வழக்கு சொத்தின் உரிமையாளர் , TN 60 L 6357 என்ற எண் கொண்ட JCB INDIAN Ltd EARTH MOVING MACHINE என்ற வாகனத்தின் அசல் பதிவு சான்றினை, மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண் Crl.R.C.(MD)No.872/2025-இன் உத்தரவின்படி, மாண்புமிகு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டையில் ஒப்படைத்ததாகவும், தற்போது மேற்படி வாகனத்திற்கு FC எடுப்பதற்காக அசல் பதிவுச்சான்று தேவைப்படுவதால், 30 நாட்களுக்கு இடைக்காலமாக அசல் பதிவு சான்றினை ஒப்படைக்கும் பட்சத்தில், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை கடைபிடிப்பதாகவும், நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலைப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார். வாகனத்தின் அசல் பதிவுச்சான்றினை இடைக்காலமாக தன் வசம் ஒப்படைக்கக் கோரி மனுதாரர்/வழக்கு

SIVAPALANI Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 13:51:30 +0530

சொத்தின் உரிமையாளரால் இந்த மனு 451 & 497 BNSS– ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பின் ஆட்சேபணை</u> :

அரசு தரப்பில், TN 60 L 6357 என்ற எண் கொண்ட JCB INDIAN Ltd EARTH MOVING MACHINE என்ற வாகனத்தின் அசல் பதிவு சான்றினை மனுதாரர்/வழக்கு சொத்து உரிமையாளரிடம் ஒப்படைத்தால், அசல் ஆவணத்தினை மாற்றிவிடுவார் என்ற போதும், உரிய நிபந்தனைகளின்படி மனுதாரர் வசம் ஒப்படைக்க ஆட்சேபணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா?</u>

<u>தீர்வு</u>

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் பதில் அறிவிப்பு பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனமானது இந்நீதிமன்றத்தில் R.P.No.15/2025 ஆக எண்ணிடப்பட்டு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை Crl.R.C.(MD)No.872/2025–இன் உத்தரவின்படி மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கப்பட்டது. மேற்படி உத்தரவின்படி TN 60 L 6357 என்ற எண் கொண்ட JCB INDIAN Ltd EARTH MOVING MACHINE என்ற வாகனத்தின் அசல் பதிவு சான்றானது இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட அசல் பதிவுச்சான்றினை, மனுதாரர் வசம் ஒப்படைப்பதற்கு மேற்படி உத்தரவில், இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதாலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் நிபந்தனைகளை தளர்வு செய்ய இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்பதாலும், இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

இந்த உத்தரவு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7–ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 13:51:40 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**